ஸ்ரீ

# கல்யாண சம்பிரமம்

என்னும்

# சம்மந்தி மாப்பிள்ளை எசல்

இஃது

ஸ்ரீரங்கம்

ரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பெற்று

திருச்சிராப்பள்ளி

ஜனானுகூல அச்சுக்கூடத்தில்

ஏழாவது பதிப்பு

1928-ல் பதிப்பிக்கப்பெற்றது

1928

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

REGISTRAR



ஸ்ரீ:

ஸ்ரீரங்கநாதன் துணை.

## விருத்தம்.

சம்மந்தி மாப்பிள்ளையைக் கலியாணத்திலே
சம்பிரமமாய் ஏசிமகிழ் பாடல்பாட
அன்புடனே பேதையானும் ஆரம்பித்தேன்
அம்புயத்தோன் தேவிவாணி அருள்செய்வாயே.

---

## 1-வது கட்டம்

### பல்லவி

லக்ஷ்மி கல்யாண வைபோகமே — லக்ஷ்மி

### சரணங்கள்

1. பக்ஷமுள்ள சம்மந்தி பாட்டியுடன் தாத்தா
அக்ஷயமாய் பூதலத்தில் ஆசையாய் வாழ — லக்ஷ்மி

2. கொள்ளுப்பேரன் பேத்தி தங்கள் குழந்தைகுட்டியுடனே
அள்ளுகிழமாய் உலகில் அநேகநாள் வாழ — லக்ஷ்மி

---

## 2-வது கட்டம்

நலங்கிடுகிறாள் மீனலோசனி மெட்டு.

### பல்லவி

வாடி சம்மந்தி வாடி உனக்கு நான்
வேடிக்கையாய் நலங்கிடுகிறேன் — வாடி

### அனுபல்லவி

மோடி செய்யாமல் உன் பந்துஜனத்துடன்
கூடி நீ வேகமாய் ஓடி வாடி

### சரணங்கள்

1. நந்தியாவட்டை மாலையுனக்கு நான் நாகரீகமாகச் சூட்டி
அந்தமாய் பெரிய வாழைக்காய்த்தாலியை அழகாய் கழுத்தில்
மாட்டி வாடி

2. பச்சைமாவைக் கறைத்து உனக்கு நான் பரிமள கெந்தம் பூசி
இச்சையாகவே எச்சிலையினால் இன்பமாயுனக்கு வீசி வாடி

3. சோப்புமஞ்சளெடுத்து உன்காலுக்கு செவ்வையாய் முழுதும் பூசி
காப்புத்தென்னோலை தன்னில்செய்து உந்தன் கைதனில்
பூட்டி ஏசி வாடி

---

## 3-வது கட்டம்

### பத்தியம்—இராகம் ஆனந்த பைரவி

என்னடி சம்பந்தி இத்தினை வடிவழகாய்
என்னமாய் உன்னை அயன் சிருஷ்டித்தானோ
சிங்கம்போல் பல்லழகும் சிருத்தைப்போல் மூக்கழகும்
செங்குரங்குபோல்உந்தன் முகத்தினழகும்
ஒட்டகம்போல் கழுத்தழகும ஒணான்போல்முதுகழகும்
ஓனாய்போல் உந்தனுட வயரினழகும்
காட்டானைபோல் உந்தன் கண்ணழகும் நிறத்தழகும்
காண்டாமிருகம்போல் உன் வடிவின் அழகும்
பன்றி பெருச்சாளிபோல் உந்தன் பார்வையழகும்
பாழும்காட்டு நரி கழுதைபோல் குறலினழகும்
உடம்பு கரடிபோல் உன்னுடைய உடம்பினழகும்
உனக்குள்ள குறையது ஒருவாலு தாண்டி

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூ...

---

## 4-வது கட்டம்

### ஊஞ்சல்–ராகம் பைரவி

1. வளமுடனே கிரைமரம் கொடுங்கை பூட்டி
வளர்புடலங்கொடியதனை சங்கிலியாய்மாட்டி
இளவாழை மரப்பலகை ஊஞ்சல்மீதே
எங்களுடைய சம்மந்தி ஆடிரூஞ்சல்.

2. சம்மந்தி இடையினிலே கந்தலாட
சங்குமணி மாலையது கழுத்திலாட
திம்மன்போல் சம்மந்தி ஊஞ்சலாட
தெருவில் உள்ள ஜனங்களெல்லாம் வந்து கூட.

---

## 5-வது கட்டம் லாலி

ஆசையுடன் சம்மந்தி ஊஞ்சலாடும்போது
அழகுடனே கழுதை கீதம்பாடினதப்போது லாலி
வேடிக்கையாய் சம்மந்தி டோலே ஆடும்போது
வெங்கடேச கவண்டன்கண்டு மகிழ்ந்தனன் அப்போது லாலி

---

## 6-வது கட்டம் லாலி

1. லாலி லாலய்யலாலி சம்மந்திக்கி
அறையில் ஏகந்தலாலி
ஊரிலே ரொம்பஜோலி சம்மந்தியை
பாரெங்கும் செய்வர்கேலி

2. கண்டிக்கு போயிவருவள் சம்மந்தி
காட்டரளி வாங்கிவருவள்
கொண்டையில் சூட்டிக்கொள்வள் சம்மந்தி
குலுக்குவள் லாலி

3. மலையாளம் போயிவருவள் சம்மந்தி
மருக்கொழுந்து வாங்கிவருள்

மகிழ்வாகச் சூட்டிக்கொள்வள் சம்மந்தி
மயங்குவள் லாலி லாலி

4. குச்சிலிப்பொட்டுமிட்டு சம்மந்தி
கூசாமல் மைய்யுமிட்டு
மெச்சியே தன்னைத்தானே சம்மந்தி
மினுக்குறாள் லாலி லாலி.

---

## 7-வது கட்டம் கீர்த்தனை.

இராகம்—தோடி (என்னடி மெத்த தளுக்கு மெட்டு)

### பல்லவி.

என்னடி மெத்தக் குலுக்கி நடக்குறாய் அடியே
சம்மந்தி நீ என்னடி

### அநுபல்லவி.

சென்னப்பட்டணம் செட்டிகடையில்
ஜெர்மன் ஸில்வர் மெட்டி திருடி
உன்னுடைய கால்விரலினில் அணிந்து
உல்லாசமாய் கைவீசியே சல்லாபமாய் ஒரு வேசிபோல்

### சரணங்கள்

1. மதுரைப் பெரியகடைதனில் ஓடி புள்ளிப்புடவையுடனே
மஞ்சள் சீட்டி ரவிக்கையைத்திருடி
புதுப்புடவையை பிறித்து உடுத்து
பின்னும் முன்னும் பார்த்து நெளித்து
மயங்கி மயங்கித் தியங்கி நடக்குறாய் உன்
மாயந்தனை அறிவேண்டி நீ செய்வது தெரிவேனடி என்

2. பெங்களூரில் அங்கடிக்கோடி மிகப்பேசி மயக்கி
பித்தளை ஓலைதன்னை நீ திருடி
மங்கிடாமல் புளியைத்தடவி
மாய்ந்து தேய்த்து காதில் அடைத்து
மகிழ்ந்து புகழ்ந்து மயங்கி மினுக்குறாய் உன்
மர்மம் மனமறியாதோ இம்மாநிலம் தெரியாதோ என்

---

## வேறு 8-வது கட்டம்

கீர்த்தனை

இராகம்—கமாஸ் (ஸராஸஸமுக மெட்டு)

### பல்லவி

சாப்பிடுவதில் சம்பந்தி கெட்டிக்காரி
ஸம்பிரமாக வாரிச் — சாப்பி

### அனுபல்லவி

கூப்பிடாத அகத்தில் கூசிடாமலே ஓடி
காப்பி ரவை உப்புமா காணுமலே திருடிச் — சாப்பி

### சரணங்கள்

1. வாழக்காய் பண்ணுகிறவகையது சொஞ்சமுமறியாள்தெரியாள்
வடையுடன் தயிர் குழம்பிடும் வயணமதையும் குறியாள்
பாயஸம் லட்டுடன் பக்ஷணமதைக்கண்டு
வாயைத்திறந்துகொண்டு வாரிவாரிப்போட்டுக்கொண்டு சாப்பி

2. கூட்டுக்குளம்புகரி கோசுமலிசெய்வதும் குறியாள் தெரியாள்
கோதுமை ரவைரொட்டி பூரி செய்திடும் வகை அறியாள்
மூக்கையுரிஞ்சிகொண்டு முழங்கால் தடவிக்கொண்டு
நாக்கை நீட்டிக்கொண்டு நக்கிநாலு ஜாமத்தில் — சாப்பி

---

## வேறு 9-வது கட்டம்

கீர்த்தனை (ஏமி சேது மெட்டு)

### பல்லவி

என்ன சட்டமோ என்ன திட்டமோ
எங்கள் சம்மந்தி விருந்துசெய்தது — என்ன

### அனுபல்லவி.

மின்னைக்கீரை மாப்பிரண்டை தன்னை
ஒன்னுய் நன்னுய் பண்ணுள் குழம்பு — என்ன

O-I MANIK
N

### சரணம்.

தோப்புத்துரவு ஓடியலேந்து
தும்பைக்கீரை பறித்துச்சுண்டி
மேப்பைக்கூழுங் கிளரி வைத்தனள்
கேளாய் வாரார் பாராய் இவளுக்கு என்ன

---

## வேறு 10-வது கட்டம்.

### மங்களம்.

1. கூஜாவைப் பிடித்துக்கொண்டு
குலுக்கி ரொம்ப நடித்துக்கொண்டு
கும்பகோணம் ஸ்டேஷனிலே ரயிலில் ஏறி
ஆசாரி குப்பனேயும் ஆசையுடன் அழைத்துக்கொண்டு
அழகாக கல்யாணம் வந்தவளுக்கு ஜயமங்களம் நித்திய
சுபமங்களம்

2. மல்லிகைப்பூச் சூட்டிக்கொண்டு
மயங்கிமெத்த நடந்துகொண்டு
மாயவரம் ஸ்டேஷனிலே ரயிலில் ஏறி
மாதேவன் வணிகனுடன் மகிழ்ந்துமிகப் பேசிக்கொண்டு
மங்களமாய்க் கல்யாணம் வந்தவளுக்கு ஜயமங்களம்
நித்திய சுபமங்களம்

---

## வேறு கீர்த்தனே 11-வது கட்டம்.

மாப்பிள்ளே ஏசல் (மாதாட பாராதேனே மெட்டு.)

### பல்லவி

மாப்பிள்ளே சமத்தரடி சாப்பிடுவதில்
மாப்பிள்ளே சமத்தரடி

### அனுபல்லவி

காப்புக்கடுக்கன் வித்து காப்பி வாங்கி குடிப்பார் மாப்

சரணங்கள்.

1 செட்டிகடையில் கந்து வட்டிக்கி கடன்வாங்கி
இட்டிலி வடைவாங்கி இரண்டு தடவையுண்பார் மாப்

2 பொட்டி நகைதிருடி போனவிலைக்கு வித்து
பட்டணம்பொடி வாங்கி மட்டை மட்டையாய்போட மாப்

3 தோட்டம் நிலங்கள் வித்து ஈட்டுக்கடன்கள் வாங்கி
கூட்டாளியுடன் கூடி சீட்டாடி தோற்பதில் மாப்

4 தஞ்சாவூர் திண்டாடி தாசித்தெருவில்கூடி
வஞ்சிவேசியைக்கண்டு கெஞ்சிப் பல் இளிப்பதில் மாப்

---

## வேறு கீர்த்தனை 12-வது கட்டம்

இராகம்—பியாக் (இந்துமுகிமெட்டு)

பல்லவி

மாப்பிள்ளை இவர் அழகைவந்து
மகிழ்வுடன் பாராய் அடி மங்கையே வாராய்

சரணங்கள்

1 சிகப்பினில் இவர் யானை கரடி காக்கையைப்போலே
சொகுசினில் இவர் காட்டு எருமை பன்றியைப்போலே
அடி மங்கையே வாராய் வந்து மகிழ்வுடன் பாராய்

2 வயிரும் இவர்க்கு குதிரைப்போலே வாய் ஜலதாரை
வடிவினில் இவர் குரங்கைப்போலே வாய்த்தவர் நேரே
அடிமங்கையே வாராய் வந்து மகிழ்வுடன் பாராய்

---

## 13-வது கட்டம்

ஓடம்

தென்னிந்தியா முழுவதிலும் சுத்தி
தேடிவந்த மாப்பிள்ளையின்
உன்னிதமாம் குணமுழுதும் நன்றாய்
உரைத்திடுவேன் கேளடியோ இவர்

முடுக்கு

பள்ளிக்கூடம் காலேஜி பார்த்ததே இல்லை
பாடஞ்சொல்வோர்களைப் பார்த்தாலும் அழுவார்
எட்டுக்குமேலிவர்க்கு எண்ணத்தெரியாது
இங்கிலீஷ் தமிழ் என்னும் எழுத்துத்தெரியாது
ஸமஸ்கிருதம் வாசிக்கும் சமத்து தெரியாது
ஸம்பிரதாயம் பேசும் வயணம் தெரியாது
ஏட்டிலே எழுத்தாணி நாட்டத்தெரியாது
இதமாக வார்த்தைகள் பேசத்தெரியாது
பைஸைகில் ஏறிவரும் பாங்குத்தெரியாது
பந்தாடி மகிழ்ந்துவரும் பணிக்குத்தெரியாது
கச்சேரி போய்வரக் கணக்குத்தெரியாது
கார்வாரி பேசுகிற வழக்குத் தெரியாது
என்னென்ன வித்தைகள் என்னத்தெரியும
ஏத்து பிடித்து இறைக்கத்தெரியும்
எருமைக்கிடாவை மேய்க்கத்தெரியும்
பாத்திக்குத் தண்ணி இரைக்கத்தெரியும்
பாங்காக சோமனைத் தோய்க்கத்தெரியும்
வேலிக்கி முள்ளு அடைக்கத்தெரியும்
வெட்டி மாத்தை அடுக்கத்தெரியும்
பொட்டியுடன் பொடி போடத்தெரியும்
பொய்யுடன் கோழுகள் சொல்லத்தெரியும்
பெண்டுகள் நடுவினில் பேசத்தெரியும்
பொறுமை கொண்டு மிக ஏசத்தெரியும்
ஏலேலோ மாப்பிள்ளையும் என்ன சமத்திவர் குணமும்

முற்றிற்று.

கண்ணன் துணை